1979 பிப்ரவரி 19]

போளூர் பேரூராட்சியை நகராட்சியாக்கல்

* வினா எண். 86—திரு. கே. ஜே. சுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம், போளூர் பேரூராட்சியை நகராட்சி ஆக்க அரசிடம் திட்டம் ஏதாவது உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) & (ஆ) மாவட்ட ஆட்சியாளரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள பேரூராட்சிகளை நகராட்சிகளாக உயர்த்துவதற்கு அரசிடம் தனித் திட்டம் இருக்கிறதா? அப்படியானால் எந்த எந்த பேரூராட்சிகளை நகராட்சிகளாக உயர்த்தப்போகிறார்கள்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: திட்டம் இருக்கிறது. கீழக்கரை, அரியலூர், அம்பாசமுத்திரம், திருத்துறைப்பூண்டி ஆகிய பேரூராட்சிகள் நகராட்சிகளாக ஆக்கப்படும் திட்டம் இருக்கிறது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள பேரூராட்சி மன்றங்களிலே குடிநீர்த் திட்டம் இல்லை, குடிநீர் கிடைப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. அதற்குத் தனியாகத் திட்டம் உண்டா? 4,5 லட்சம் ரூபாய் அளவில் திட்டம் போட்டு அதிலே நான்கில் ஒரு பங்கு கட்டவேண்டுமென்று சொல்லப்படுவதால் ஒன்றியங்களிலே உள்ள நிதிநிலையின் காரணமாக கட்டமுடியாத நிலைமை இருக்கிறது. அதன் காரணத்தால் குடிநீர் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது, ஆகவே அதற்குத் தனியாக திட்டம் உள்ளதா

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, குடிநீர் வாரியத்திற்குப் பொறுப்பேற்றிருக்கின்ற தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்குத் தனிக்கேள்வியாகப் போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, போளூர் பேரூராட்சியை நகராட்சியாக ஆக்குவதற்கான திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். போளூர் நகரம்,

பொருளாதாரத்திலே மிகவும் பின்தங்கியிருக்கும் மக்கள் வாழும் இடம். அதை நகராட்சியாக மாற்றினால் மக்களுக்கு அதிக வரி விதிக்க வேண்டி வரும். எனவே, அது தொடர்ந்து பேரூராட்சியாகவே இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அதனுடைய வருமானம் மூன்று இலட்சத்திற்கு மேல் அதிகரித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதை நகராட்சியாக ஆக்கக்கூடாது என்று பேரூராட்சியின் தலைவர் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, இதுபற்றி விரிவாக அனுப்புமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 87 முதல் 89 வரையில் அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, ஒரு சிறு வேண்டுகோள். இரண்டாவது பெரிய எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் மன வருத்தத்திலே போய்விட்டார்கள். அவர்கள் இருந்திருந்தால் துணைக்கேள்விகள் போடுவார்கள். வரச்சொல்லி நீங்கள் ஒரு வார்த்தை சொல்லக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் வந்து விட்டார்கள்.

வேடர் சமூகத்தினர்

* வினா எண். 90 — திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் உள்ள வேடர் சமூகத்தினரை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்திட மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என் கிட்டப்பா: தலைவரவர்களே, பிற்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் உள்ள வேடர் சமூகத்தினரை தாழ்த்தப் பட்டோர் பட்டியலில் சேர்த்திட மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள்